பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 03 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.
- ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் 80 சதவீத வீடுகளுக்கு குழாய்மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.
- திருச்சியில் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள உலகத் தரத்திலான நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.
- உக்ரைனில் உள்ள அரிய கனிம வளங்களை பயன்படுத்துவது தொடர்பாக அந்நாட்டுடன் விரைவில் ஒப்பந்தம் கையெழுதாக இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் கூறியுள்ளார்.
- 2030-ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அகமதாபாத்தில் நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

விவசாயிகள் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவையில் விவாதம் நடத்த அனுமதித்தால்தான் விவசாயிகள் நலனுக்கான பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்றார்.

விவசாயிகள் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க மத்திய அரசு தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் நலனுக்காக பாடுபடுவதே திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசின் உயர் முன்னுரிமையாக உள்ளது என்றும் திரு சிவராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ், இதுவரை கிராமப்புறங்களில் உள்ள சுமார் 80 சதவீத வீடுகளுக்கு குழாய்மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்தித்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், தெலங்கானா, கோவா, குஜராத், மிசோரம் உள்ளிட்ட எட்டு மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் உள்ளிட்ட மூன்று யூனியன் பிரதேசங்களில் 100 சதவீத குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

கடந்த 18-ஆம் தேதி நிலவரப்படி ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 12 கோடியே 29 லட்சம் கிராமப்புற வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சீர்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் ஐந்து மாநகராட்சிகளில் உள்ள 39 குடிசைப்பகுதிகள் அகற்றப்பட்டு அங்கு வசித்த மக்களுக்கு மாற்று குடியிருப்பு வசதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வீட்டு வசதி மற்றும நகர்புற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்துள்ள அவர், சென்னை, கோவை, திருப்பூர், ஈரோடு வேலூர் ஆகிய ஐந்து மாநகராட்சிகளில் நகர்புற நீர்நிலைகளை சீரமைப்பதற்காக இந்த குடிசைகள் அகற்றப்பட்டதாக கூறினார்.

தமிழக அரசு தெரிவித்துள்ள தகவலின்படி இந்த ஐந்து நகரங்களிலும் வசித்த குடிசைவாழ் மக்களுக்கு 64 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகளுடன் கூடிய மாற்றுக்குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

குடிசைகள் அகற்றப்பட்ட இடங்களில் நீர்நிலைகள் சீரமைக்கப்பட்டிருப்பதுடன், பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப் பட்டிருப்பதாகவும் திரு மனோகர்லால் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பாலியல் அத்துமீறல் வழக்கு ஒன்றில் அலகாபாத் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்து ஏற்புடையதல்ல என மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுபோன்ற கருத்துக்கள் சமூகத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவதோடு, இதுபோன்ற தவறுகளை ஊக்குவிப்பதாக அமைந்துவிடும் என்றும் தெரிவித்தார்.

இதுபோன்ற சர்ச்சைக்குரிய கருத்துக்களை கவனத்தில் கொண்டு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் திருமதி அன்னபூர்ணா தேவி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

பங்கு விற்பனை மூலம் திரட்டப்பட்ட நிதியை முறைகேடாக பயன்படுத்திய தொழில் நிறுவனங்களுக்கு எதிராக செபி அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

குறிப்பிட்ட நோக்கத்திற்காக பங்குகளை வெளியிடும் நிறுவனங்கள் அதன் மூலம் கிடைக்கும் தொகையை, தங்கள் உறவினர்கள் அல்லது போலி நிறுவனங்களின் பெயருக்கு மாற்றி முறைகேடு செய்வதாக எழுந்த புகாரின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து நிறுவனங்களுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், செபி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[]<<<>>>[]

அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்களில் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் 24 மணி நேரமும் விற்பனையில் ஈடபட அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

குவாஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதற்கட்டமாமக திப்ருகர், சில்சார், குவாஹாத்தி ஆகிய மூன்று நகரங்களில் இதற்கான அனுமி வழங்கப்படும் என்றார்.

மதுபான கடைகள் தவிர பிற கடைகளை 24 மணி நேரமும் திறந்து வைக்க மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிற நகரங்களில் அதிகாலை இரண்டு மணி வரையிலும், கிராமப்பகுதிகளில் இரவு 11 மணி வரையிலும் கடைகளை திறக்க அனுமதிக்கப்படும் என்றும், தொழிலாளர்கள் அதிகபட்சமாக ஒன்பது மணி நேரம் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்றும் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா கூறினார்.

[]<<<>>>[]

திருச்சியில் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள உலகத் தரத்திலான நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறையின் ஒருகால பூஜை திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 17 ஆயிரம் திருக்கோவில்களுக்கான வைப்பு நிதியை தலா இரண்டரை லட்சம் ரூபாயாக உயர்த்திடும் வகையில் 85 கோடி ரூபாய்க்கான ஆணைகளை அர்ச்சகர்களிடம் அவர் வழங்கினார்.

இது தவிர கூடுதலாக ஆயிரம் கோவில்களுக்கு ஒருகால பூஜை நிதியாக தலா இரண்டரை லட்சம் ரூபாய் வழங்குவதற்கான ஆணைகளையும் திரு மு க ஸ்டாலின் வழங்கினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 42 தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று நிதி நிலை அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், மதுரையில் உள்ள உலகத்தரத்தினாலான நூலகத்தின் மூலம் இதுவரை 14 லட்சம் பேர் பயனடைந்திருப்பதாகக் கூறினர்,

கீழடியில் உள்ள அகழாய்வு அருங்காட்சியகத்தை லட்சக்கணக்கானோர் பார்வையிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழி பெயர்க்க உரிய நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் திரு தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

உலக காடுகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காடுகளின் முக்கியத்துவத்தையும், அதன் பாதுகாப்பையும் உணர்த்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21-ஆம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

வனப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்கும் நோக்கில், மத்திய – மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

காடுகளும், உணவும் என்பதே இந்த ஆண்டின் மையக்கருத்தாகும்.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் காடுகள் அதிக அளவில் வளர்க்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ராஜசேகர் ) --- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

உக்ரைனில் உள்ள அரிய கனிம வளங்களை பயன்படுத்துவது தொடர்பாக அந்நாட்டுடன் விரைவில் ஒப்பந்தம் கையெழுதாக இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் அவர் அளித்த பேட்டியில், ரஷ்யா உக்ரைன் இடையே போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதாகவும், கூறினார்.

கனிம வளம் மற்றும் அரிய தாதுக்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அவசர உத்தரவில் கையெழுத்திட்டிருப்பதாகவும் திரு டொனால்டு ட்டிரம்ப் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

2030-ஆம் ஆண்டு காமல்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அகமதாபாத்தில் நடத்த இந்திய காமன்வெல்த் விளையாட்டுச் சங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை இந்த சங்கத்தின் தலைவர் திருமதி பி டி உஷா தலைமையிலான குழுவினர் முறைப்படி காமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இதற்கான விண்ணப்பத்தை காமன்வெல்த் விளையாட்டு சம்மேளனம் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் திருமதி பி டி உஷா உறுதி செய்துள்ளார்.

சர்வதேச போட்டிகளை நடத்த அகமதாபாத்தில் உரிய வசதிகள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

11-வது ஆசிய நீச்சல் சாம்பியன் போட்டி இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என இந்திய நீச்சல் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்த போட்டிகள் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் வரும் அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீச்சல், டைவிங், வாட்டர்போலோ உள்ளிட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவிருப்பதாகவும் அந்த சம்மேளனம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இந்தோனேஷியாவின் **Priska nugroho** இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்த்தில் இந்த இணை 7-5, 7-5 என்ற செட் கணக்கில் சீனாவின் **Jiaqi wang – chengyiyi yuan** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ப்ரஜ்வால் தேவ் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-4, 6-2 என்ற செட் கணக்கில் தென்கொரியிவின் ஊபின் ஷினை வென்றார்.

**[]<<<>>>[]**